மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வாடிப்பட்டி, மதுரை மாவட்டம்.

முன்னிலை: திரு.D.ராம்கணேஷ் M.A., M.L.,

மாவட்ட உரிமையியல் நீதிபதி.
2021ம் வருடம் ஏப்ரல் மாதம் 07ம் நாள்
சார்வரி ஆண்டு பங்குனி மாதம் 25 ம் நாள் புதன்கிழமை

I.A . No. 639/2020
in
O.S. No. 35/2020

1) பி. கருப்பு என்ற கருப்பையா
2. சு. பொன்னுச்சாமி
3. வெ. மகாமுனி
4. வீ. மகாமுனி
5. எஸ். பொன்னர்
6. எம். மாரியப்பன்
7. அ. பிச்சையம்மாள்
8. கா. கர்ணன்
9. சி. அசோக்குமார்
10. கே. பெரியகரப்பு
11. பெ. ராஜமாணிக்கம்
12. மு. பிரேம்குமார்

..... மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

//எதிர்//

கே. நாகலிங்கம்

.... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு 02.12.2020ம் தேதி விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திருC. தீபக் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் திரு.T.K. கோபாலன் அவர்கள் ஆஜராகியும், கடந்த 17.03.2021ம் தேதி இந்நீதிமன்றத்தில் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, இருதரப்பும் கேட்கப்பட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடலான...

உத்தரவு

இந்த நிர் மனுவும் மனுதாரர்கள்/பிரதிவாதிகளால், இந்த அசல் வழக்கு O.S. 35/2020ன் பிராதினை உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் கட்டளை 7 விதி 11 மற்றும் பிரிவு 151ன்படி, நிராகரிக்க கோரி (Rejection of Plaint) தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. மனுவின் சுருக்கம்:

மனுதாரர்கள் அசல் வழக்கின் பிரதிவாதிகள் என்றும், அசல் வழக்கும் தாவா பிராது சொத்தில் குறிப்பிடப்பட்ட கோவிலின் பூசாரி அனுபவத்தினை பிரதிவாதிகள் இடையூறு செய்யக் கூடாது என பிரதிவாதிகளைக்கட்டுப்படுத்தி நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரப்பட்டுள்ளது என்றும், தாவா வழக்கு தாக்கல் செய்வதற்கான வழக்கு மூலம் எதுவுமின்றி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எதிர்மனுதாரர்/வாதி தாவா கோவிலின் பரம்பரை பூசாரி என்பதற்கு ஆதரவாக எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றும், தகுதி வாய்ந்த நீதிமன்றம் அல்லது தகுதி வாய்ந்த அதிகாரிகளின் முன்னிலையில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்படாமல் வழக்குமூலமின்றி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், இந்து சமய அறநிலையத்துறையால் தாவாகோவிலின் பரம்பரை பூசாரி என உத்தரவு பிறப்பிக்கப்படாத நிலையில், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கினை சட்டப்படி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலாது என்றும், பொது மக்கள் பணத்தை அபகரிக்க வேண்டுமென்ற எண்ணத்தில் கற்பனை மற்றும் யூகத்தின் அடிப்படையில் தான் தாவா கோவிலின் பரம்பரை பூசாரி என்று மனுதாரர்/வாதியால் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், அசல் வழக்கினை தாக்கல் செய்வதற்கான அதிகார வரம்பு இந்நீதிமன்றத்திற்கு இல்லையென்பதால், வாதி தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல என்றும், எனவே இந்து சமய அறநிலையத்துறையினரால், வாதியை பரம்பரை பூசாரி என உத்தரவு பிறப்பிக்காத நிலையிலும், அதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படாத நிலையிலும், அசல்வழக்கு தாக்கல் செய்வதற்கான வழக்குமூலம் எதுவும் ஏற்படாத நிலையிலும், பிரதிவாதிகளுக்கு எதிராக கற்பனையான மற்றும் யூகத்தின் அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்துள்ள நிலையிலும், 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதியைப்பொறுத்து எவ்வித வழக்கு மூலமும் ஏற்படாத நிலையிலும், எதிர்மனுதாரர்/வாதி அசல் வழக்கினை தாக்கல் செய்துள்ளதால், எதிர்மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள பிராதினை நிராகரித்து மனுவினை அனுமதிக்கும்படி வாதுரைக்கப்பட்டது.

2) எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்படும் எதிர் உரையின் சுருக்கம்:

மனுவில் கண்டுள்ள விபரங்கள் அனைத்தும் தவறானதாகும். அவைகள் எதிர்மனுதாரர் வாதியால் மறுக்கப்படுகிறது. அசல் வழக்கு பிராது 9ல் "கச்சைகட்டி கிராம ஊராட்சி மன்ற தலைவர் தன் அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி வாதியின் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட இடத்தில் கழிவு நீர் சாக்கடையும், பேவர் பிளாக்கும் அமைக்க முயற்சி செய்து சட்ட நடவடிக்கை எடுத்து வருவதால், விரோதம் கொண்ட கச்சைகட்டி கிராம ஊராட்சி மன்ற தலைவர்

பிரதிவாதிகளை தூண்டி வழக்கிடைச்சொத்தில் வாதிக்குரிய பரம்பரை பூசாரி மற்றும் உரிமையை தங்களுக்கு எழுதிக்கொடுக்க வேண்டுமென மிரட்டி வந்ததால் கடந்த 14.4.2020ம் தேதியில் வாடிப்பட்டி காவல்நிலையத்தில் புகார் கொடுத்தும், பின்னர் மீண்டும் பிரதிவாதிகள் கடந்த 09.06.2020ம் தேதியிட்டு பூசாரி மற்றும் டிரஸ்டி உரிமைக்கு இடையூறு ஏற்படுத்தியதால், மீண்டும் காவல்நிலைய புகார் கொடுக்கப்பட்டபோது நீதிமன்றம் மூலம் பரிகாரம் பெற்றுக்கொள்ள அறிவுரை வழங்கியதாக வழக்குமூலம் தெளிவாக பிராதில் குறிப்பிடப்பட்டுள்ளதை மறைத்து வீண்டு அலைகழிப்பு செய்யவேண்டும் என்ற எண்ணத்தில் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், வாதி பரம்பரை பூசாரியாக செயல்பட்டு வருவதற்கான ஆவணங்களை பிராதோடு தாக்கல் செய்து தான் தாவா சொத்தில் பரம்பரை பூசாரியாக செயல்படுவதற்கு மனுதாரர்கள்/பிரதிவாதிகள் இடையூறு செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், பொய்யான சங்கதிகளைக்கூறி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளது சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல என்பதால் இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென எதிர்வாதம் செய்யப்பட்டது.

3) மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனு அனுமதிக்கத்தக்கதா என்பதே தீர்வு காண வேண்டியது பொருண்மை ஆகும்.

<u>தீர்வு:-</u>

4) இரு தரப்பு வாதுரைகள் மற்றும் வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்ததில், இந்த நிர் மனுவும் மனுதாரர்/பிரதிவாதியால் அசல் வழக்கு பிராதானது வழக்கு மூலத்தை தெளிவுபடுத்தவில்லை என்றும், அசல் வழக்கு பரிகாரம் தொடர்பாக விசாரணை செய்வதற்கு இந்நீதிமன்றத்திற்கு அதிகார வரம்பு தடை ஏற்பட்டுள்ளது என்றும், அதனடிப்படையில், அசல் வழக்கினை நிராகரிக்க கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் அசல் வழக்கானது வாதியால், தாவா கோவில் பரம்பரை நிர்வாகி மற்றும் பூசாரி என்ற அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், மேற்படி பரம்பரை பூசாரி மற்றும் நிர்வாகி தொடர்பான ஆணையினை இந்து சமயஅறநிலையத்துறை ஆணையாளர் அல்லது இணை ஆணையாளர் ஆகியோர்களுக்கு தான் மேற்படி சட்டப்பிரிவு 63ன்படி விசாரணை செய்து உத்தரவு பிறப்பிக்க அதிகாரம் உள்ளது என்றும், எனவே எதிர்மனுதாரர்/வாதி மேற்படி வழக்கு பரிகாரம் தொடர்பாக இந்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளது அதிகார வரம்பு மீறியதாக உள்ளது என்றும் வாதுரைக்கப்பட்டது.

5) எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் அசல் வழக்கு சொத்தான தாவா கோவிலில் வாதி மற்றும் அவரது முன்னோர்கள் பரம்பரை நிர்வாகி மற்றும் பரம்பரை பூசாரியாக இருந்து அனுபவம் செய்து

வருகின்றனர் என்றும், அதற்காக தாவா சொத்து கிரையம் பெறப்பட்டு மேற்படி கோவில் ஆனது தொடர்ச்சியாக வாதி மற்றும் வாதியின் முன்னோர்களால் நிர்வாகம் செய்யப்பட்டு வருகின்றது என்றும், அசல் வழக்கானது மேற்படி கோவிலில் பரம்பரை நிர்வாகி மற்றும் பூசாரி உரிமை தொடர்பாக விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்படவில்லை என்றும், மேற்படி கோவில் உள்ள தாவா சொத்தில் வாதி பூசாரி மற்றும் நிர்வாகியாக செயல்படுவதை பிரதிவாதிகள் எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என நிரந்தர தடையாணை பரிகாரம் கோரி மட்டுமே தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே அசல் வழக்கு தொடர்பாக இந்நீதிமன்றத்திற்கு விசாரணை செய்வதற்கு அதிகார வரம்பு உள்ளது என்றும், மனுதாரர்கள்/பிரதிவாதிகள் எதிர்மனுதாரர்/வாதிக்கு பாத்தியமான சொத்தில் கழிவுநீர் சாக்கடை அமைப்பது தொடர்பாக பிரச்சனை செய்து அதன் தொடர்ச்சியாக ஏற்பட்ட முன்விரோதம் காரணமாக தாவா கோவில் மற்றும் அத்துடன் இணைந்த சொத்தில் இடையூறும் செய்யும்பொருட்டு தொடர்ச்சியாக செயல்பட்டு வந்ததால், எதிர்மனுதாரர்/வாதியால் வாடிப்பட்டி காவல்நிலையத்தில் புகார் மனு கொடுக்கப்பட்டு, அதன்பேரில் பிரதிவாதிகள் மீது குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது என்றும், எனவே வழக்கு பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியது என்றும் எதிர்வாதம் செய்யப்பட்டது.

6) இது தொடர்பாக இருதரப்பு வாதுரை மற்றும் அசல் வழக்கு பிராதினை பரிசீலனை செய்தபோது, அசல் வழக்கு பரிகாரமாக அடியிற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

“வாதி வழக்கிடைச்சொத்தில் உள்ள கோவில்களுக்கு பரம்பரை பூசாரியாக செயல்பட்டு வருவதற்கு பிரதிவாதிகளோ, அவரது ஆட்களோ எவ்வித இடையூறும் செய்யக்கூடாதென நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும்” எனக்குறிப்பிட்டு, அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் அசல் வழக்குடன் தாக்கல் செய்யப்பட்ட 1வது ஆவணமாகிய 18.03.1941ம் தேதியிட்ட கிரைய பத்திரத்தில் “ஊர்காலசுவாமி கோவிலுக்காகவும், மேற்படி கோவிலின் பக்கத்தில் ஸ்தாபிதம் செய்யப்பட்டிருக்கும் சின்னன் சுவாமி கோவிலுக்குமாகப்பூசாரியும் டிரஸ்ட்டியுமான மேற்படியரிலிருக்கும் அய்யனார் குடும்பன் மகன் பள்ளர் பயிர் பிச்சைக்குடும்பன் (1) மேற்படியூரிலிருக்கும் பழனியாண்டி குடும்பன் மகன் மேற்படி அழகி கூத்தக்குடும்பன் (2) மேற்படியூரில் இருக்கும் மாலைக்காரக்குடும்பன் மகன் மேற்படி பாப்பக்குடும்பன (3) மேற்படியூரிலிருக்கும் சுப்பக்குடும்பன் மகன் மேற்படி பழனியாண்டிக்குடும்பன் (4) மேற்படியூரிலிருக்கும் கருப்பணக்குடும்பன் மகன் மேற்படி மேற்கு நாகுக்குடும்பன் (5) மேற்படியூரிலிருக்கும் சின்னையக்குடும்பன் மகன் மேற்படி சந்தனக்குடும்பன்(6) பேர்கள் மேற்படி கோவில்களுக்காக இந்த ஆறு டிரஸ்ட்டிகளுக்கு ” என்றும், அதேபோல் “எனக்கு கிரைய பாத்தியமான அடியிற்கண்ட மனையை நாளது தேதியில் மேற்படி கோவில்களுக்காக டிரஸ்ட்டிகளாகிய உங்களுக்கு நான் ரூ.7க்கு கிரைய பத்திரம் பதிவு செய்து கொடுக்கிறேன்” என்றும் குறிப்பிட்டுக் கிரைய பத்திரம் பதிவு செய்து கொடுத்துள்ளது தெரியவருகிறது. எனவே மேற்படி கிரைய பத்திரத்தின்படி 1941ம் வருடமே

வாதியின் முன்னோர்கள் தாவா கோவிலில் டிரஸ்டி மற்றும் பூசாரியாக இருந்து வருவது தெரியவருகிறது.

7) மேலும் இந்த நிர் வழக்கிலும் குறிப்பிடப்பட்டுள்ள ஊர்கால சாமி கோவில் மற்றும் சின்னன் சாமி கோவில் ஆகிய கோவில்கள் தாவா சொத்தில் இல்லை என்பதாக மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் எவ்வித எதிர்வாதமும் செய்யப்படவில்லை என்பது தெரியவருகிறது. மேலும் அசல் வழக்குடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள 2வது ஆவணமான மாண்புமிகு சென்னை உயர்நிதிமன்றம் WP(MD)No. 7850/2018 உத்திரவின்படி மேற்படி எதிர்மனுதாரர்/வாதி மேற்படி கோவில் விழாக்கால நிர்வாகி என்ற அடிப்படையில் நிர்வாகம் செய்ய உத்தரவு பெறப்பட்டுள்ளது தெரியவருகிறது. அதேபோல் 3வது ஆவணமான இந்து சமய அறநிலையத்துறை ஆணையாளர் செயல்முறை நடவடிக்கையில் மேற்படி தாவா சொத்தில் அமைந்துள்ள கோவிலான சின்ன மாரியம்மன் கோவில் செயல்பாட்டிற்கு நிர்வாக குழு தலைவர் என்ற அடிப்படையில் எதிர்மனுதாரர்/வாதியைக் குறிப்பிடப்பட்டு ரூ.50,000/- நிதி உதவி வழங்குவதற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது தெரியவருகிறது. அதேபோல பிராதுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள 5 முதல் 7 வரையிலான ஆவணங்களானது தேர்தல் அலுவலர் மற்றும் மின் வாரிய உதவி மின் பொறியாளர் மற்றும் வாடிப்பட்டி காவல்நிலைய சார்பு ஆய்வாளர் ஆகியோர் வழங்கிய சான்றிதழ்கள், எதிர்மனுதாரர்/வாதி மேற்படி திருக்கோவிலில் நிர்வாகியாக செயல்பட்டு வந்ததை உறுதிபடுத்தும் பொருட்டு கடிதங்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டுள்ளது தெரியவருகிறது. எனவே அசல் வழக்கு பிராது மற்றும் பிராதுடன் இணைக்கப்பட்டுள்ள ஆவணங்களின்படி தாவா கோவிலுக்குரிய சொத்தின் நிர்வாகி மற்றும் பூசாரியாக எதிர்மனுதாரர்/வாதி மற்றும் அவரது முன்னோர்களும் பரம்பரையாக செயல்பட்டு வந்தது தெரியவருகிறது.

8) மேலும் இந்த நிர் அசல் வழக்கும் மேற்படி திருக்கோவிலில் பரம்பரை வழக்கத்தின் அடிப்படையில் எவ்வித உரிமை கோரியோ அல்லது அதனடிப்படையில் இடைக்கால பலன்கள் கோரியோ தாக்கல் செய்யப்படவில்லை. தாவா திருக்கோவிலுக்கு பாத்தியமான சொத்தில் எதிர்மனுதாரர்/வாதி நிர்வாகி மற்றும் பூசாரியாக செயல்பட்டு வருவதை மனுதாரர்கள்/பிரதிவாதிகள் இடையூறு செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மட்டுமே தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் மேற்படி திருக்கோவிலுடன் சேர்ந்த சொத்தினையும் கட்டுப்படுத்தி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், சொத்து தொடர்பான பிரச்சனைகளை தீர்வு காண்பதற்கு உரிமையியல் நீதிமன்றம் மட்டுமே அதிகார வரம்புடையது என்பதும் நிலைநிறுத்தப்பட்ட சட்டக்கோட்பாடு ஆகும். மேலும் பரம்பரை வழக்கத்தின் அடிப்படையில் ஏற்கனவே ஊர்ஜிதத்தில் இருந்து வருகின்ற உரிமை தொடர்பாக

இந்து சமய அறநிலையத்துறை ஆணையாளரிடம் அங்கீகாரம் பெற வேண்டிய அவசியமில்லை என்பதும் நிலைநிறுத்தப்பட்ட சட்டக்கோட்பாடு ஆகும். அதுவும் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் அடியிற்கண்ட வழக்கில் முன்தீர்ப்பாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

Thillainayagam (v) Chidambaram, case, 2014 (1) MWN (Civil) 386 (Mad)

Section 63 - Scope- So, in order to defendant or get the entitlement of the person concerned with regard to any custom, any honour, emolument or perquisite and what the established usage of a religious Institution is in regard to any other matte,r the plaintiffs have to approach the Joint Commissioner or Deputy Commissioner. But in this case, the plaintiffs are not coming to the Court to defend or seeking entitlement of any rights. They filed suits for safeguarding their existing rights, from their grandfather's period. Hence the plaintiffs need not approach the Joint Commissioner nor Deputy Commissioner of the Hindu Religious and Charitable Endowment Board.

எனவே, எதிர்மனுதாரர்/வாதியால் தாவா சொத்தான திருக்கோவிலில் மரியாதைக்கான உரிமை மற்றும் இடைக்கால பலன்கள் தொடர்பாக அசல் வழக்கு தாக்கல் செய்யப்படாத நிலையிலும், தாவா கோவில் மற்றும் கோவில் அமைந்துள்ள தாவா சொத்து நிர்வாகி மற்றும் பூசாரியாக எதிர்மனுதாரர்/வாதி இருந்து வருவதில் பிரதிவாதிகள் எவ்வித இடையூறும் செய்யக் கூடாது என்ற அடிப்படையில் நிரந்தர தடையாணை பரிகாரம் மட்டுமே கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையிலும், மேற்படி அசல் வழக்கும் விசாரணை செய்யப்படுவதற்கு இந்நீதிமன்றத்திற்கு அதிகார வரம்பு உள்ளது என்ற அடிப்படையில் அசல் வழக்கினை நிராகரிக்க கோரி மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்த இந்த நிர் மனுவும் சட்டப்படியோ, பொருண்மைபடியோ ஏற்கத்தக்கதல்ல என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

9) மேலும் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் அசல் வழக்கு எவ்வித வழக்கு மூலத்தையும் வெளிப்படுத்தவில்லை என்று வாதுரைக்கப்பட்டது. ஆனால் வழக்குமூலம் என்பது சங்கதிகளின் தொகுப்பு (Bundle of facts) ஆகும். இருதரப்பு வாதுரைகள் மற்றும் அசல் வழக்கு பிராதுடன் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றிலிருந்து வழக்குதரப்பினர்களிடையே தாவா சொத்திலுள்ள கோவில் தொடர்பாக பிரச்சனை இருந்து வருகிறது என்பதும், தாவா சொத்தும் வாதியின் முன்னோர்களால் வா.சா.ஆ.1ன்படி 1949 ம் வருடம் தாவா கோவிலுக்காக கிரையம் வாங்கப்பட்டு, வா.சா.ஆ.2 முதல்7 வரையிலான

ஆவணங்களின்படி வாதியின் நிர்வாக செயல்பாட்டில் இருந்து வருவது தெரியவருகிறது. எனவே மேற்படி வழக்கு தொடர்பான பொருண்மைகள் வழக்கு தாக்கல் செய்யப்படுவதற்கான வழக்கு மூலத்திற்கு ஆதரவாக இருப்பதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது. மேற்படி வழக்குமூலம் தொடர்பான பொருண்மையினை அசல் வழக்கு விசாரணையிலே தீர்வு காண இயலும்.

எனவே மேற்கண்ட அசல் வழக்கு பிராது மற்றும் அதனுடன் இணைந்த ஆவணங்களின்படியும், இரு தரப்பு வாதுரைகளின்படியும் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் கோரும் இம்மனு பரிகாரம் சட்டப்படியும், பொருண்மைபடியும் ஏற்கக்கூடியதில்லை என தீர்வு கண்டு இம்மனு தள்ளுபடி செய்யப்படுகிறது.

இறுதியாக இம்மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவு தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு அவரால் கணிணியில் விரிவாக்கம் செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்ட பின்னர் 2021ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 07ஆம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

(ஓம்.D.ராம்கணேஷ்)

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.

//உண்மை நகல்//